தெய்வீகத் திட்டம்

இத்திட்டத்தின் கருவானது வசந்த காலத்தில்
ஒரு விதை விதைக்கப்பட்டு, அது முளைத்து,
வளர்ந்து, மலர்ந்து வருவதைப் போலானது.
இதன் வளர்ச்சியில் அநேகருக்குப் பங்கு உண்டு.
இதனை எடுத்து நாற்று நடுவது போல,
வேதவாசிப்பு மற்றும் தியானத்தின் மூலமாக
உங்கள் இதயங்களில் நட்டு வையுங்கள்.
இது வளர்ந்து கனி கொடுக்கும். இதன்
பலன் மிகச் சிறந்ததாகும்

க்ளென் க்ளார்க்

1. எனக்கென்று ஒரு திட்டம் தேவனிடத்தில் உள்ளது என்று நான் நம்புகின்றேன். தேவதாரு விருட்சம் அதனுடைய விதையிலும், ரோஜா மலர் அதன் மொட்டிலும் மறைந்து இருப்பது போல, இந்தத் திட்டம் என்னில் பொதிந்துள்ளது. இத்திட்டம் நிரந்தரமானதும், அழிக்கப்படமுடியாததும், முழுமையானதும், கெடுதலானவைகளிலிருந்து விடுபட்டதுமாக இருக்கும். என் வாழ்க்கையில் நேரிடும் எதிர் மறை நிகழ்வுகள் தேவன் அமைத்த இத்தகைய திட்டத்தின் ஒரு பகுதியாக இரா. ஆனால், தேவனின் திட்டத்துக்கு எனது ஒத்துழைப்பு இல்லாமற்போனதுதான் அத்தகைய எதிர்மறை நடப்புகளுக்குக் காரணமாக இருக்கும். இத்திட்டம் தெய்வீகத்தன்மையுடையது என நான் நம்புகிறேன். மேலும், அதற்கு முழுமையாக நான் என்னைத் தளர்த்தி விட்டுக் கொடுத்தால், அது முற்றும் முழுமையாகவும், நிறைவாகவும் என் மூலம் வெளிப்படும் என நம்புகிறேன். என்னுள்ளே தோன்றும் ஓர் உள்ளான சமாதானத்தின் மூலம், 'நான் இந்தத் தேவ சித்தத்துக்கு இசைந்துவிட்டேன்' என்று தெரிந்து கொள்வேன். இந்த உள்ளான சமாதானம் என்னை மகிழ்ச்சியோடு கூடிய, ஆக்கப்பூர்வமான உணர்வோடு இந்தத் திட்டத்தில் வெளிப்படுத்துமாறு செயல்பட ஏவுகிறது. அல்லது, அது என்னுள் ஆழ்ந்த அமைதியையும் பொறுமையையும் கொண்டு வந்து, பிறர் எனக்காக, இந்தத் திட்டத்தில் செயல்படுத்த உதவுகிறது.

2. இந்த அழகான தெய்வ திட்டமானது, எனக்காக மட்டுமின்றி அனைவருக்கும் நன்மை புரியக்கூடிய ஒரு பரந்த திட்ட வகிப்பாகும். நான் சந்திக்கும் அனைவருக்கும், எல்லா சம்பவங்களுக்கும், இத்திட்டம் கிளைகளாகப் பிரிந்ததும், ஒன்றுக்கொன்று பின்னப்பட்டதுமாக அமைந்து வருகிறது என நம்புகிறேன். மேலும், எனக்குள் இருக்கும் இந்தத் திட்டத்துக்கு நான் ஒத்துழைப்பது எப்படியெனின், நான் சந்திக்கும் அனைவரையும் எல்லாச் சம்பவங்களையும் மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வது மல்லாது, எனது முழுமையான தேவ திட்டத்தை, முழுமையாக செயல்படுத்தக்கூடிய முழுமையான கருவிகளாக அவர்களைக் கருதுவதே. சுருங்கக் கூறின் எவ்வாறு உள்ளானவற்றில் ஒற்றுமையிருந்தால், வெளிப்படையானவற்றுடன் ஒற்றுமை காண முடிகிறதோ, அவ்வாறே வெளிப்படையான வற்றுடன் ஒற்றுமையாயிருந்தால், உள்ளானவற்றில் ஒற்றுமை காணலாம் என நம்புகிறேன்.

3. எனக்குரிய தேவ திட்டத்திற்கு ஏற்றவாறு எனக்கு நெருங்கியவர்களாகவும், ஒருவருக்கொருவர் ஒத்தாசையாகத் தொடர்ந்து இருப்பவர்களாகவும் சிலரைத் தேவன் தெரிந்தெடுக்கிறார் என நம்புகிறேன். அவர்களை நான் நேசிக்கவும், அவர்களுக்குப் பணியாற்றவும், நான் அவர்களால் நேசிக்கப்படவும், எனக்கு அவர்கள் பணியாற்றத் தக்க மகத்தான தகுதியைப் பெறுவதற்கு ஜெபிக்க வேண்டுமென நம்புகிறேன். எனக்கு உதவி

செய்பவர்கள் என்னை நெருங்கவும், நானும் அவர்களுக்கு மறுஉதவி செய்யவும், எனது வாழ்க்கையை அவர்களுடன் சேர்ந்து அனுபவிக்கவும் எனது பிதாவினிடத்தில் ஜெபிக்க வேண்டுமென நம்புகிறேன்.

4. என்னுடையது எதுவோ அதை நான் பெற வேண்டுமென்றும் தக்கசமயம் வாய்க்கும் போது அதைப் பெற்றுக் கொள்வேன் என்றும், பரம பிதாவிடம் நான் கேட்க வேண்டுமென நம்புகிறேன். இதன் மூலம் பராமரிக்கும் தேவ திட்டப்படி எனக்குரிய வைகளை மட்டும்தான் நான் எதிர்பார்த்துப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற திறமை ஏற்படுகிறது. அதனால் எல்லா கவலைகளும், ஐயப்பாடுகளும் என் மனதிலிருந்து விடுபெறுகின்றன. பயம், பொறாமை, கோபம் இவையனைத்தும் வெளியேறுகின்றன. என்னுடைய சொந்தக் காரியங்களை மட்டுமே நான் செய்துவர எனக்குத் தைரியமும், விசுவாசமும் கிடைக்கிறது. எனது எண்ணங்கள் எனக்குரியவைகளை மட்டும் சிந்திக்குமானால் பேராசை, ஆதங்கம், தீயசிந்தனைகள், தீய செயல்கள் இவற்றிலிருந்து தப்பிவிடுவேன். ஆனால் பிறர் எவற்றைப் பெற்றுக் கொள்கிறார்கள், எவற்றைப் பெற்றுக் கொள்ள வில்லையென்று நான் பார்க்க ஆரம்பித்தால், தேவனிடத்திலிருந்து நான் பெறக்கூடியவற்றையும் நானே குறைத்துக் கொள்கிறேன்.

5. தேவனிடத்தில் உள்ள ஈவுகள், நான் பெறுவதற் குரிய தகுதியை விட பல்லாயிரம் மடங்கு அதிக மாக உள்ளன. ஆகவே, அவற்றை அடையத்தக்கத் தகுதியை நான் அதிகரித்துப் பெற்றுக் கொள்ளவும், பிறருக்கு அவற்றைக் கொடுக்கவும் நான் தகுதிபெற ஜெபிக்க வேண்டுமென நம்புகிறேன். தேவ ஈவுகள், எப்பொழுதும் சமாதானம், மனநிறைவு, பேரின்பம், ஆகியவற்றை தருகின்றன. ஆதலால் இயல்பான ஒற்றுமை, சமாதானம், பிறர் வாழ்வில் குறுக்கிடாம லிருப்பது, இவை போன்றவையெல்லாம் என்னுடையவை. மேலும் என்னை இயல்பாகவே அழைக்கக்கூடிய எந்த வேலையும் நான் எனக்குள் இருக்கும் தாலந்துகள் மூலம் அவற்றை எளிதாகச் செய்யத் தோன்றினால், அவை என்னுடைய வேலையாகும். எனக்குரியவருடன் நான் இணைந்து கொண்டால், தேவனுடைய ராஜ்யத்தில் அதற்கு தடையேதுமில்லை, ஆகவே, மற்றவைகளை நான் ஏற்றுக் கொள்வதில்லை.

6. கர்த்தருடைய திட்டம் அனைவருக்கும் ஆரோக்கி யத்தையும், ஆனந்தத்தையும் தருகிறது என நம்புகிறேன். நான் சந்தோஷமாகச் செய்வதெல் லாம் பிறருக்குச் சந்தோஷம் கொடுக்க வேண்டும். ஆதலால், நான் செய்ய வேண்டியது எதுவோ அது தடைபட்டால், தேவன் அவ்வாயிலை அடைத்து விட்டு வேறொரு வாயிலைத் திறந்து விடுகிறார் என நம்புகிறேன். ஒவ்வொரு அடைபட்ட வாயிலும், அதைவிடச் சிறந்ததும், அகலமுமான

வாயிலை எனக்குச் சுட்டிக்காட்டும். ஆதலால், எனது ஏமாற்றங்களெல்லாம் தேவனுடைய நல்ல தருணங்களாக மாறிவிடுகின்றன. இப்படியாக என் முன் தோன்றும் வாயிலை நான் உடனே காணா விடில், எனது குருட்டாட்டம், செவிட்டுத்தன்மை கீழ்ப்படியாமை போன்ற சுவர்கள் என்னைத் தேவனிடத்திலிருந்து பிரிக்கின்றனவென நம்புகி றேன். இவ்விதம் ஏற்படும் தோல்வியைக் கொண்டு, அதை நான் மேற்கொள்ளத் தேவையான உந்துதலையும், வழிவகுத்தலையும், ஆற்றலையும் நான் அடையச் செய்து, சரியான வாயிற்கதவைக் காண தேவன் உதவி செய்கிறார்.

7. வாழ்க்கையின் முக்கிய அம்சம், பிதாவினோடு தொடர்பு கொள்வதும், என்னுள் இருக்கும் தெய்வீகம் வெளிப்படச் செய்வதுமே என நம்புகிறேன். என்னைச் சுற்றியுள்ள உலகம் அழகும், ஆனந்தமும், ஆற்றலும் கொண்டு முழுவதும் தெய்வத்தன்மை வாய்ந்தது என நம்புகிறேன். அதை ரசிப்பதற்கு, நான் தேவனது திட்டத்தைப் பற்றிக் கொண்டு, தேவனை நோக்கி உள்ளாகவும், மனிதருக்கு உதவியாக வெளியாகவும் செயல்பட வேண்டும். என்னுள் நிலைத்திருந்து இவ்வாழ்க்கை தரிசனத்தைக் கொடுத்த என் பரமபிதாவும், நண்பனுமாகியவரை நோக்கி, 'இதை நான் மற்றவரிடம் பகிர்ந்து கொள்வதால் அமைதியும் ஆனந்தகளிப்பும் பிறர் அடையத்தக்கதாக உதவி புரியுமாறு' விண்ணப்பிக்கிறேன்.